# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 1. 30 மணி | பதிவு எண்: | மதிப்பெண்கள்: 50

### பகுதி - I

உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக: 8×1=8

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் எவ்வாறு வரும்
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
3. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
4. செய்தி 1 - ஒவ்வோர்ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 - காற்றாலை மின்உற்பத்தியில்இந்தியாவில்தமிழகம்இரண்டாமிடம்என்பதுஎனக்குப்பெருமையே
செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
5. 'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத் தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத் தொகை
6. அறிருருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக்காரணமாக அமைவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

*கீழ்க்கண்ட பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:*

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

7. மெத்த வணிகலன் என்னும் தொடரில்தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும் ஆ) பெரும் வணிகமும்பெரும் கலன்களும் இ) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக்கப்பல்களும் அணிகலன்களும்
8. இப்பாடலில் வரும் அடி எதுகைகள்
அ) முத்தமிழ் - முச்சங்கம் ஆ) முத்தமிழ் - மெத்த இ) முத்தமிழ் - துய்ப்பதால் ஈ) மெத்த - மேவலால்

### பகுதி - II

#### பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 13க்கு கட்டாயம் விடையளிக்கவும்: 3×2=6

9. வசன கவிதை - குறிப்பு வரைக.
10. மன்னும் சிலம்பே மணிமேகலை வடிவே -! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
-இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
11. விருந்தினரை மகிழ்வித்துக்கூறும் முகமன் சொற்களை எழுதுக.
12. 'நமக்கு உயிர் காற்று காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இதுபோன்று உலகக்காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.
13. "முயற்சி" என தொடங்கும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

#### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 2×2=4

14. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?
15. *சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக (ஏதேனும் நான்கு சொற்கள்)*
(தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ)

www.Padasalai.Net www.CBSEtips.in



16. *சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.* (காற்று, நறுமணம், காடு)
அ) ஒரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்
ஆ) இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை

17. *பழமொழிகளை நிறைவு செய்க:* அ) உப்பிட்டவரை .............. ஆ) அளவுக்கு ..............

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21க்கு கட்டாயம் விடையளிக்கவும்:** 2×3=6

18. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம்பயிர்வகை மூன்றின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

19. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

20. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:*

உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை! நாம் நம்பியிருப்பதும் நம்மில் இருப்பதும் இயற்கையே. மூச்சுக்காற்று தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் போன்றவை உயிரினங்களின் முதன்மைத் தேவை, இயற்கையின் கூறுகளில் காற்றின் பங்கு கூடுதலானது. மெல்லத் தொட்டுச் சென்றால் தென்றல், தூக்கிச்சென்றால் புயல்.

அ) இயற்கையின் கூறுகளில் எவற்றின் பங்கு கூடுதலானது?
ஆ) உயிரின வாழ்வின் அடிப்படை எது?
இ) மேற்கண்ட பத்திக்கு பொருத்தமான தலைப்பு எழுதுக.
ஈ) "அன்னை மொழியே" எனத்தொடங்கும் மனப்பாடல் (அல்லது) "சிறுதாம்பு" எனத்தொடங்கும் மனப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி:** 1×3=3

22. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் - இக்குறளுக்கு அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாவிற்கும் விடையளி:** 3×5=15

24. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தினையும் பெருஞ்சித்திரனாரின் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்று தயார் செய்க. (அல்லது)
ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

25. அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப்பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

26. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பகுதி - V

***கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளி:*** 1×8=8

27. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)
"சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

--------

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593